**முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**M.C.O.P.No.12/2025**

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | சந்திரா |
| தகப்பனார் / கணவர் | .. | பெருமாள்சாமி |
| வயது | .. | 56 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | திருவடிராயபுரம் |
| தாலுக்கா | .. | வெம்பாக்கம் |

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1, சட்டப்பிரிவு மாற்றம் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.2, TN 97 V 5745 என்ற இருசக்கர வாகனத்தின் ஆர்.சி. புத்தகம் நகல் ம.த.சா.ஆ.3, TN 97 V 5745 என்ற இருசக்கர வாகனத்தின் பாலிசி நகல் ம.த.சா.ஆ.4, TN 97 V 5745 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.5, மனுதாரருக்கு காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு நகல் ம.த.சா.ஆ.6, மனுதாரருக்கு காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி அசல் ம.த.சா.ஆ.7, மனுதாரருக்கு காஞ்சிபுரம் லைப்கேர் மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி அசல் ம.த.சா.ஆ.8,

மனுதாரருக்கு காஞ்சிபுரம் லைப்கேர் மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் அசல் ம.த.சா.ஆ.9, மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.த.சா.ஆ.10 ஆகும்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த இடத்தில் இரண்டு பேருந்துகள் செல்லும் அளவிற்கான சாலை என்றால் சரிதான். மோட்டார் சைக்கிளில் வந்தவர் முன்னாடி வந்தாரா என்றால் என் பின்னால் வந்து மோதிவிட்டார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை பிடித்தார் என்றால் தெரியாது, மயக்கமாக இருந்தேன். நான் கூலி வேலை செய்கிறேன். நான் மருத்துவ சிகிச்சைகள் அனைத்தும் அரசு மருத்துவமனையில் பார்த்தேன் என்றால் சரிதான். நான் காஞ்சிபுரம் தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றேன். மருத்துவ பில்கள் எவ்வளவு செலுத்தப்பட்டது என்று தெரியாது. நான் குணமானவுடம் மருத்துவமனையில் இருந்து அனுப்பிவிட்டனர். எனக்கு ஒரு நாள் ஊதியம் என்ன என்றால் ரூ.60 கொடுப்பார்கள். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் தெரியாது. இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவு தான் காரணம் என்றும், மோட்டார் வாகன ஓட்டுநரின் கவனகுறைவு காரணம் இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கு ஒரே மகன், அவன் பெயிண் அடிக்கும் வேலை பார்க்கிறான். எனக்கு ஏற்பட்டிருக்கும் காயம் சொற்ப காயம் என்றும், மேலும் இருசக்கர வாகனத்தை ஓட்டியவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் 3 ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**